**கவனிக்க.**- *2008.01.11 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1533 - 2008 ජනවාරි 18 වැනි සිකුරාදා - 2008.01.18

*1533 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 60 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 61 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 62 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, சனவரி 25 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, சனவரி 11 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

**(கொள்வனவு அறிவித்தல்)**

இலங்கைப் புகையிரதப் பகுதிக்கு 6,000 சோடிகள் தண்டவாள ஷிம்களை (Rail Shims) வழங்குவதற்கான விலைமனுக்கள்

தலைவர், திணைக்கள கொள்வனவுச் சபை (பெரியது), இலங்கைப் புகையிரத சேவைகள், புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 இல் இலங்கையில் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கான சீலிடப்பட்ட விலைமனுக்கள் உற்பத்தியாளர்கள்/ விநியோகத்தர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படுகின்றன :

| பொருட்கள் | அளவு | விபரம் | வரைவு இல. |
|---|---|---|---|
| 1 | 2,000 சோடிகள் | 90A இறா தண்டவாளத்திற்கான இல. 07 தண்டவாள ஷிம்கள் | 20404 |
| 2 | 2,000 சோடிகள் | 90A இறா தண்டவாளத்திற்கான இல. 09 தண்டவாள ஷிம்கள் | 20404 |
| 3 | 2,000 சோடிகள் | 90A இறா தண்டவாளத்திற்கான இல. 11 தண்டவாள ஷிம்கள் | 20404 |

உற்பத்தியாளர்கள் தமது விலைமனுக்களை நேரடியாகவோ அல்லது அதிகாரத் தத்துவம் பெற்றவர்களுமான அங்கீகரிக்கப்பட்ட முகவர்களினூடாகவோ சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 11.02.2008 பிற்பகல் 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. மீளப்பெறப்பட முடியாத விலைக்கூற்றுப் பணமாக ரூபா 3,000 ஐ அல்லது அதற்குச் சமமான இலகுவாக மாற்றீடு செய்யக்கூடிய அந்நிய நாட்டு நாணயத்தாளைச் செலுத்துவதன் மூலம் புகையிரதக் களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து 08.02.2008 பிற்பகல் 3.00 மணிவரை (இலங்கை நேரம்) பெறப்படும் விலைமனுப் பத்திரங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். விலைமனு ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும்போது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. சீலிடப்பட்ட விலைமனுக்களை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிப்பதன் மூலமாகவோ, விலைமனுக்கள் மூடப்படும் நேரத்திற்கு முன்னர் பின்வரும் முகவரியில் சமர்ப்பித்தல் வேண்டும் :-

தலைவர்,
திணைக்கள கொள்வனவுச் சபை (பெரியது),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனுப்பத்திர ஆவணங்களை எந்தவித கட்டணங்களுமின்றி "புகையிரதக் களஞ்சிய அத்தியட்சர் அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை", தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2432044 அல்லது 94(11)2436818 எனும் முகவரியில் பரிசீலனை செய்யலாம். மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
திணைக்கள கொள்வனவுச் சபை (பெரியது),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

கேள்வி இல. எஸ். ஆர். எஸ்./எவ். 6616.

1-558

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் விதிகள் பிரகாரம் 2007, நவெம்பர் 30 ஆந் திகதி நீம் லங்கா (பீவீரீ) லிமிட். கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப் படுகிறது.*

*கம்பனியின் பெயர் :* நீம் லங்கா (பீவீரீ) லிமிட்.
*கூட்டிணைப்பு இலக்கம் : பீவீ 62228*
*பதியப்பட்ட அலுவலகம் :"சந்தகிரி", இல. 141, அளுத்கம வீதி, பண்டாரகம*

நிர்வாகத்தர்.

*1-559*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ள என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.*

*கம்பனியின் பெயர் :* ரோஸ்வுட் ரோய்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைப்பு இலக்கம் : பீவீ 62408*
*திகதி : 14.12.2007*
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* 83-A, கொஹொல்வில வீதி, களனி.

எக்கவுண்டன்சி அன்ட் செக்ரெட்டேரியல்
சேர்விசஸ் பியுரோ லிமிட்டெட்.

86, எஸ். டி. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை,
கொஹுவளை,
நுகேகொடை,
*2007, திசெம்பர் 31.*

*1-571/ 2*

---

## பொது அறிவித்தல்

(கம்பனியின் பெயர் மாற்றப்பட்டுள்ளது)

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (2) பிரிவின் அடிப்படையின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.*

*கம்பனியின் பழைய பெயர் :* தாய் எக்ஸ்பிரஸ் குவிசின் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 60795*
*திகதி : 26.07.2007*
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* 62, ஹவ்லொக் வீதி, கொழும்பு 5
*கம்பனியின் புதிய பெயர் :* ஸ்பைஸ் றூட் (பிறைவேட்) லிமிட்டெட்
*திகதி : 18.12.2007.*

எக்கவுண்டன்சி அன்ட் செக்ரெட்டேரியல்
சேர்விசஸ் பியுரோ லிமிட்டெட்.

86, எஸ். டி. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை,
கொஹுவல, நுகேகொட,
*2008, சனவரி 1.*

*1-571/ 1*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் 'வோக்கர் அன்ட் கிறீக் பீஎல்சீ அல்லது என்வயமென்ரல் ரிசோசர்ஸ் இண்வெஸ்ட்மன்ட் பீஎல்சீ' ஆக 2007, திசெம்பர் 3 ஆந் திகதி முதல் பெயர் மாற்றப்பட்டுள்ளது.*

*கம்பனியின் பெயர் :* என்வயமென்ரல் ரிசோசர்ஸ் இண்வெஸ்ட்மன்ட் பீஎல்சீ
*கம்பனியின் இலக்கம் :* பீகியு26
*பதிவு அலுவலகம் :* இல. 42, 2 ஆவது மாடி, சேர் மொஹமட் மாக்கான் மாக்கர் மாவத்தை, கொழும்பு *3*

சபையின் கட்டளைப்படி,

செயலாளர்,
செக்ரேட்டரீஸ் அன்ட் ரெஜிஸ்ரர்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 32, 2 ஆவது மாடி,
கோல்பேஸ் கோர்ட் 2,
கொழும்பு 3.

*1-557/ 2*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் ஏசியன் மீடியா நெட்வேர்க்ஸ் (பிரை) லிமிட்டெட் 2007, திசெம்பர் 13 இல் கூட்டிணைக்கப்பட்டது.*

*கம்பனியின் பெயர் :* ஏசியன் மீடியா நெட்வேர்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் :* பி. வி. 62381
*பதிவு அலுவலகம் :* இல. 16/3, கேம்பிரிஜ் பிளேஸ், கொழும்பு 7

சபையின் கட்டளைப்படி,

செயலாளர்,
செக்கரட்டரீஸ் அன்ட் ரெஜிஸ்ட்ரார்ஸ்
(பிரைவேட்) லிமிட்டெட் செக்கரட்டரீஸ்

இல. 32, 2 ஆவது மாடி,
கோல்பேஸ் கோர்ட் 2,
கொழும்பு 3.

*1-557/ 1*

---

## பகிரங்க அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட எஸ்எம்ஈ வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி ஆகியவற்றை ஒன்றிணைப்பது சம்பூரணப்படுத்தப்பட்டுள்ளது தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 244 (3) பிரிவின் கீழான அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட எஸ்எம்ஈ வங்கியை வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியுடன் ஒன்றிணைப்பது உரிய முறையில்

சம்பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பது வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர வங்கியின் பணிப்பாளர் சபையினால் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. சட்டத்தின் 244 (2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வொன்றிணைத்தல் 2008, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுல் செய்யப்படுகிறது.

சபையின் கட்டளைப்படி,

பணிப்பாளர் சபை,
வரையறுக்கப்பட்ட லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி.

1-519

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பிரைவேட் லிமிட்டெட் லயபிலிட்டி கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் : கிறவுண் பிஸ்னஸ் கொலேஜ் (பிரை) லிமிட்டெட்

கம்பனி இலக்கம் : பி. வி. 62495

பதிவு அலுவலகம் : இல. 373, காலி வீதி, கல்கிஸ்ஸ

சபையின் கட்டளைப்படி,

செயலாளர்,
எஸ். பீ. கோர்ப்பரேட் கொன்சல்டன்ட்ஸ்.

1-484

---

### பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்படல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவான அறிவித்தல் பின்வருமாறு :-

கம்பனியின் பெயர் : சம்சன் பைக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

கம்பனியின் இலக்கம் : பீவீ 62447

திகதி : 18.12.2007

கம்பனி பதிவுசெய்த அலுவலக முகவரி : சம்சன் பைக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், இல. 110, குமாரன் ரத்தினம் வீதி, கொழும்பு 02

செக்ரேட்டரியஸ்,
பிஸ்னஸ்மேட் (பிரைவேட்) லிமிட்டெட்.

இல. 45, பிறேபுரூக் வீதி,
கொழும்பு 2,
2007, திசெம்பர் 27.

1-515

---

### அட்டோர்ணி தத்துவம் இரத்துச்செய்தல்

கல்கிஸ்ஸை, டெம்பிளர்ஸ் பாதை, இலக்கம் 140/15, "கலாபுர"வில் வதியும் சுதத் சிறிவர்தன ஆகிய நான், குளியாபிட்டிய பிரசித்த நொத்தாரிசு எச். எச். எல். ஆர். குணரத்னவினால் 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டு குளியாபிட்டிய, போஹின்கமுவையில் வதியும் பளிஹவடகே சுஜானி சம்பிகாவிற்கு வழங்கிய 7184 என்ற அட்டோர்ணி தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து வலுவற்றதாக்குகிறேன் என்பதை இலங்கைச் சனநாயக குடியரசிற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

சுதத் சிறிவர்தன.

2007.10.30.

1-455

---

### அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

நுகேகொடை, ஹைலெவல் வீதி, 303/3, பத்மகுமாரி அல்விஸ் ஆகிய என்னால் நுகேகொடை, ஹைலெவல் வீதி, இல. 303/3, நந்தசேன டீ அல்விஸ் என்பவருக்கு, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சீ. என். எ#ப். டீ சில்வா அவர்களால் 2002.08.20 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட அட்டோர்ணித் தத்துவ இல. 58 ஐ இல்லாதாக்குவதாய் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன்.

என் சார்பில், நந்தசேன டீ அல்விஸ் அவர்களால் செய்யப்படும் எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல.

பத்மகுமாரி அல்விஸ்.

2007.12.14.

1-505

---

## ஏல விற்பனைகள்

### றுஹுண அபிவிருத்தி வங்கி-கெகனதுர கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின்கீழ் விற்பனை அறிவித்தல்

#### சொத்துக்கள் ஏல விற்பனை

றுஹுண அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள் 2008.02.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்கக ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

#### ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்திலே, மாத்தறை கடவத் சதரைக்குள் வெவ இஹலகொடயில் அமைந்துள்ள கஜ்ஜுகஹஹேன வத்தயில் பிரித்து வேறாக்கப்பட்ட 'ஜீ' எழுத்தைக் கொண்ட ஒரு நூட் முப்பத்தொன்று தசம் ஐந்து (0ஏ. 1றூ. 31.50பே.) கொண்ட

மிகப்பெரிய காணியும், அதிலுள்ள அனைத்தும் உள்ளடக்கியதாகும். இக்காணி மானக கே. பீ. எஸ். யாபா அவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட இலக்கம் 8989 இல் 22.03.2006 ஆந் திகதிக்குரிய வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2007.10.22 ஆந் திகதிக்குரிய அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும், 2007.11.22 ஆந் திகதிக்குரிய "தினமின", "தினகரன்", "த ஜலண்ட்" எனும் சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- மாத்தறை, கெகனதுர பாதை வழியாக தல்பாவில மகா வித்தியாலயத்தைத் தாண்டியதும், யடியன பக்கமான மீற்றர் 200 அளவு சென்று வெவ இஹலகொட மகாகவிட பாதையில் மீற்றர் 400 அளவு சென்று அரக்கவத்த பாதையில் மீற்றர் 100 செல்ல மாகாவிட குளத்திற்கு எல்லையாக இக்காணி தென்படும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- ஏலவிற்பனை இறுதியில் வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் கீழ்க்கண்டபடி பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 25% ;

(2) உள்ளூர் அதிகார சபையின் வரியாக விற்பனை விலையின் 1% ;

(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;

(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூ. 500 ;

(5) விற்பனைச் செலவும் வேறு செலவுகள் இருப்பின் அவையும் ;

(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான குறிப்பிட்ட விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, பம்புரண, அனகாரிக தர்மபால மாவத்தை, இலக்கம் 382ஏ நிலையத்திலுள்ள றுஹுணு அபிவிருத்தி வங்கியின் தலைவர் அவர்களுக்கு செலுத்துக.

மேற்படி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்தத் தவறின் தற்போதைக்கும் செலுத்திய 25% க்கான பணத்தை மீண்டும் செலுத்தாது விடவும் மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் குறிப்பிட்ட பணத்தையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்க. தொலைபேசி இலக்கம் : 041-2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இலக்கம் : 041-2228731

1-449

---

## DFCC வங்கி

(முன்னர் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் எனும் பெயரில் இயங்கி வந்தது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துகள் ஏல விற்பனை**

**2263 ஆம் இலக்க அடைமான பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விவரணம்**

**அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் எஸ். பி. குணசிங்க அவர்களால் வரையப்பட்ட 1991, பெப்புருவரி 21 ஆந் திகதியிடப்பட்ட 430 ஆம் இலக்க வரைபடத்தில் தபேரும்வத்த துண்டு 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பத்து, நாரம்மல உடுகஹகோரளே வடக்கிலுள்ள நாரம்மல நகரசபை எல்லைக்கு உட்பட்ட காணி, கட்டிடங்கள் மற்றும் அங்குள்ள அனைத்தும் உள்ளடங்கலாகவும்,**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 5.93பே.)**

**மற்றும் மேலே கூறப்பட்டுள்ள நாரம்மலயில் அமைந்துள்ள 430 ஆம் இலக்க வரைபடத்தில் தபேரும்வத்த துண்டு 3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணி, கட்டிடங்கள் மற்றும் அங்குள்ள அனைத்தும் உள்ளடங்கலாகவும்**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 7.13பே.)**

**மற்றும் அனுமதிப்பத்திரம்பெற்ற நில அளவையாளர் எஸ். பி. குணசிங்க அவர்களால் வரையப்பட்ட, 13.03.1996 ஆந் திகதியிடப்பட்ட வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பத்து, உடகஹ கோரளே வடக்கு நாரம்மலயில் அமைந்துள்ள தபேரும்வத்த காணியின் 830 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1 என அழைக்கப்படும் காணி (காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 6பே.)**

*(குருநாகல் பிரசித்த நொத்தாரிசு டபிள்யு. குணவர்தன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, 2001 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 2263 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் நாரம்மலயில் 'சிரிபுர ஹொட்டேல் அன்ட் பேக்கரி எனும் நிறுவனத்தை பங்காளித்துவ வியாபார முறையில் நடத்திவரும் வட்டரக்க அனில் பிரேமவன்ச, பிரியந்தி வட்டரக்க, ரூபசிங்க ஆரச்சிகே ஜொசப்பின் நோனா, வட்டரக்க மானெல் சேனாதீர ஆகியோரால் DFCC வங்கிக்கு அடகுவைக்கப்பட்டு மீளளிக்கப்படாத சொத்து)*

DFCC வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;

(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;

(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 27,000 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஐஎஸ்ஓ 9001 : 2000 ஆம் இலக்க தராதரமுடைய
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணி செயல் முகவர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி இல. : 081-2227593 | தொலைபேசி இல. : 011-2502680, 2585408 |
| தொலைபேசி/#பக்ஸ் : 081-2224371 | தொலைபேசி/#பக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.com | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

1-536

---

### கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் (கடவத்தை கிளை)

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா பதிவு எல்லைக்குள் அதிகாரிபத்து சியனே கோரலயில் வெபொடவில் அமைந்துள்ள நில அளவையாளர் சுகத் சமரவிக்ரமவின் 30.06.1986 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 44/1986 இல் காண்பிக்கப்பட்ட யக்கம்பவத்த என்ற காணி இக்காணியின் விஸ்தீரணம் (1ஏ. 1றூ. 11பே.) மற்றும் இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து பகிரங்க ஏலவிற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் 2008, பெப்புருவரி 02 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

கடன் எடுத்த சுணிலா கொண்ஷ்ட்ரசன்ஸ் என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் கொத்ஜட்டுவ வடுகே சந்திரதிலக என்பவர் மேற்படி காணியை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டுக்கு ஈடுவைத்துள்ளார்.

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**- 29.09.2006 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், "த ஐலண்ட்", "தினகரன்" பத்திரிகைகளையும் விற்பனை விளம்பரத்துக்காக 18.01.2008 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 18.01.2008 ஆந் திகதியுடைய "திவயின", "த ஐலண்ட்" பத்திரிகைகளை பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் விதம்.**- காணிக்கு கண்டி-கொழும்பு வீதியூடாக கிரில்லவெல்ல சென்று வலதுபக்கம் திரும்பி பாதையூடாக வெபொட சென்று இடதுபக்கம் திரும்பி 2 கிலோ மீட்டர் கிராம வீதியூடாக காணிக்குச் சென்று அடைய முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- ஏலவிற்பனை இறுதியில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமான கொள்வனவு விலையின் 2 1/2% ;
(4) நொத்தாரிசு கட்டணக் கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனைக்கு செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிரதான கிளை அல்லது கடவத்த கிளையில் பணமாகச் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்கும் உறுதி பற்றிய விளம்பரத்துக்காக பின்வரும் இடத்தில் பெற்றுக் கொள்ள முடியும் :-

முகாமையாளர்,
கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்,
143/பீ, கண்டி வீதி,
கடவத்த.
தொலைபேசி இல. : 2921456-7, 2921454
பெக்ஸ் இல. : 2921455

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர், நீதித்துறை ஆணையாளர் :-
கொழும்பு மாவட்ட வர்த்தக நீதிமன்றம்-
மேல் மாகாணம்,
அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகள்.

99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. : 2445393

1-556

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ-பொலன்னறுவை**

*(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை**

*(பொலன்னறுவையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். ஹரிச்சந்திர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1998, செத்தெம்பர் 1 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1211 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவரான ஆரியரத்ன என்ற மனவர்தன பட்டபெந்திகெதர கருணாதாசவால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் 2008, பெப்புருவரி 5 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**ஆதனத்தின் விவரணம்.**- வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டம், லங்காபுர பிரதேச செயலகத்தின் இல. 75ஏ, மெதபற்றுவின் ஒனேகம கிராம அலுவலர் பிரிவு, ஒனேகமவில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. ஏஜேபீ பீஓ 93 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 86 என அடையாளமிடப்பட்டதுமான நிர்ணயிக்கப்பட்ட காணி முழுவதும் (காணியின் விஸ்தீரணம் : 2ஏ. 2றூ. 35பே.).

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2007, ஒற்றோபர் 5 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007, நவெம்பர் 6 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/ 2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனையில் உறப்பட்ட மொத்த விளம்பரச் செலவுகள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்த வேண்டும்.

எஞ்சிய தொகையை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப் பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி, பிரதம முகாமையாளர் (கடன் மேற்பார்வை மற்றும் அறவீடுகள்)" அவர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இல. 2661815, 2661816.

என். எச். பீ. எவ். ஆரியரத்ன,
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர் மற்றும் நீதிமன்ற ஆணையாளர்.

1-570

---

**செலான் வங்கி பீஎல்சீ-பழைய சோனகத் தெரு கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**2 பெறுமதிமிக்க பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டுகள் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, மெதபற்று, கம்பஹா பிரதேச சபை எல்லைகளுக்குள் இஹல யாகொட கிராமத்தில் அமைந்துள்ளதும் "யாகொட எஸ்ட்டேட்" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஏ. பீ. ஏ. ரஞ்ஜித் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1999, யூன் 2 ஆந் திகதிமிடப்பட்ட வரைபடம் இல. 242 மற்றும் 241 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஓ[1] மற்றும் துண்டு பீ[1] என அழைக்கப்படுவதுமான காணியினது) ஏல விற்பனை**

**(காணிகளின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 14.53பேர்ச்சுக்கள், 0ஏ. 0றூ.16.80 பேர்ச்சுக்கள்)**

*(பிரசித்த நொத்தாரிசு சீ. சச்சிதானந்தன் அவர்களால் அத்தாட்சிபடுத்தப்பட்டு 1999, நவெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 47 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள "கடப்பாடுடையவர்" ஆன ராஜசிங்கம் இண்டஸ்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டிற்கு சொந்தமான ஆதனம்)*

செலான் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2008, பெப்புருவரி 8 ஆந் திகதி, வெள்ளிக்கிழமை மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2007, நவெம்பர் 23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007, ஒற்றோபர் 26 ஆந் திகதிய "டெய்லி மிரர்", "லங்காதீப" மற்றும் 2007, ஒற்றோபர் 25 ஆந் திகதிய "வீரகேசரி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம் :**

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) விற்பனைத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ;
(3) உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;

(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(5) ரூபா 46,093.75 ஐ விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவுகளின் 50% (ஐம்பது வீதம்) ;
(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தற் கட்டணம் ரூபா 2,500.

உரித்து உறுதிகளையும் அவற்றுடன் தொடர்புபட்ட வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, 'செலிங்கோ செலான் கோபுரங்கள்' 12 ஆவது தளம், செலான் வங்கி பீஎல்சீ, பிரதி முகாமையாளர் (சட்ட சம்பந்தமான கிளை)" இடமிருந்து பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 4-710000, 2456789.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
அரசினால் சான்றுப்படுத்தப்பட்ட நிபுணத்துவம்
பெற்ற ஏலதாரர், விலைமதிப்பிடுநரும்
ஆதன முகவரும்.

42, துட்டுகெமுனு வீதி,
பாமன்கடை,
தெஹிவளை.
தொலைபேசி இல. : 2814743
தொலைபேசி/தொலைநகல் இல. : 2814742, 2814744
துரித அழைப்பு : 0772250422

1-572

---

**செலான் வங்கி பீஎல்சீ-ஹெவ்லொக் நகர் கிளை**

**2007.5.24 ஆந் திககதியன்று நடைபெற்ற அதனது கூட்டத்தில் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் விற்பனை**

**மாபெரும் ஏல விற்பனை-வெல்லம்பிட்டி, மீதொட்டமுல்ல, விஹார மாவத்தை, 3ஏ இல் அமைந்துள்ள அதன் தொழிற்சாலை வளவுகளில் இருக்கின்ற தொழிற்சாலை பொறித்தொகுதி, மூலப்பொருட்கள், கைமிருப்புக்கள், துணிவகைகள், முடிவுபெற்ற மற்றும் முடிவு பெறாத பொருட்கள், பொறித்தொகுதி உபகரணம் முதலியன-**

**(ஹெப்பி டே லங்கா (பீவீரீ) லிமிட்டெட்டிற்கு சொந்தமான ஆதனம்)**

**உள்ளடக்கப்பெற்றவை :**

***இயந்திரங்கள் :***

| இல. | இயந்திரத்தின் பெயர் | விவரக் குறிப்பீடு | தயாரிப்புத் திகதி |
|---|---|---|---|
| (1) | ஹைட்ரோலிக் பிறெஸ் | 200t | 1996 |
| (2) | CS பிறெஸ் | 160t | 1996 |
| (3) | பவர் பிறெஸ் | 10t | 1994 |
| (4) | பவர் பிறெஸ் | 7t | 1993 |
| (5) | பவர் பிறெஸ் | 7t | 1993 |
| (6) | பவர் பிறெஸ் | 7t | 1994 |
| (7) | பவர் பிறெஸ் | 5t | 1993 |
| (8) | பவர் பிறெஸ் | 5t | 1994 |
| (9) | பவர் பிறெஸ் | 3t | 1993 |
| (10) | பவர் பிறெஸ் | 3t | 1993 |
| (11) | பவர் பிறெஸ் | 3t | 1993 |
| (12) | பவர் பிறெஸ் | 3t | 1993 |
| (13) | பவர் பிறெஸ் | 3t | 1993 |
| (14) | ஸ்பொட் வெல்டர் | 3k | 2000 |
| (15) | ஸ்பொட் வெல்டர் | 3k | 2001 |
| (16) | ஸ்பொட் வெல்டர் | 3k | 2002 |
| (17) | ஸ்பொட் வெல்டர் | 5k | 2002 |
| (18) | ஸ்பொட் வெல்டர் | 5k | 2002 |
| (19) | ஸ்பொட் வெல்டர் | 5k | 2000 |
| (20) | பொலிஷிங் லைன் (A) | 5 sets | 2002 |
| (21) | வாஷர் | | 1993 |
| (22) | பொலிஷிங் சக் | | 1994 |
| (23) | கொம்பிறெசர் | | 1994 |
| (24) | ஷியரிங் லைன் | | 1995 |
| (25) | ஷியரிங் m/c | | 1995 |
| (26) | கொன்வெயர் ஆதியன | | 1995 |
| (27) | அல்ட்றா சொனிக் வாஷர் | | 1994 |
| (28) | பென்டிங் m/c | | 2000 |
| (29) | ஸ்குறூ கொம்பிறெசர் | | 2000 |
| (30) | எலெக்றிக் #போர்க் லிப்ட் | | 2000 |
| (31) | #போர்க் போர் லிப்ட் | | 2000 |
| (32) | லத் #பிக்ஸிங் | | 2001 |
| (33) | கொன்டென்சர் ஸ்பொட் | | 2002 |
| (34) | இன்வேட்டர் ஆர்கன் வெல்டர் | | 2002 |
| (35) | ஆட்டோ-பக்கிங் M/c | | 2002 |
| (36) | கொன்வெயர் | | 2002 |
| (37) | அல்ட்றா சொனிக் வாஷர் | | 2003 |
| (38) | அல்ட்றா சொனிக் வாஷர் | | 2003 |
| (39) | கொம்பிறெசர் | | 1991 |
| (40) | லிப்ட் | | 1994 |
| (41) | ஏயர் சொ#ப்ற் ஆதியன | | 1994 |
| (42) | கொன்வெயர் | | 1994 |
| (43) | வெல்டா | | 1995 |
| (44) | பென்டிங் MC (SA) | | 1996 |

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தினுள் இல. 3A, விகார மாவத்தை, மீதொட்டமுல்ல வெல்லம்பிட்டிய என்ற வரிமதிப் பீட்டிலக்கம் கொண்ட வளவில் உள்ளனவும் அதன்கண் அமைந் துள்ளனவுமான கையிருப்புச் சரக்குகள், பூர்த்தியான மற்றும் பூர்த்தியாகாத பண்டங்கள், இயந்திரங்கள், சாதனங்கள் மற்றும் உடைமைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பொருள்களும் ஏனைய எல்லா உருப்படிகளும் தளபாடம், பொருத்திகள் மற்றும் சொத்துக்களும் எவ்விதத்திலேனும் விவரிக்கப்படும் எல்லா வகையான ஏனைய அசைவுள்ள ஆதனங்களும் (இவை எல்லாம் இதனகத் துப்பின்னர் "கடனெடுத்தவரின் கையிருப்புச் சரக்குகள், பொருள்கள், பூர்த்தியான மற்றும் பூர்த்தியாகாத பண்டங்கள்" என்று குறிப்பீடு செய்யப்படும்) மொத்தமாகவும் தனித்தனியாகவும் எல்லாஞ் சேர்த்து. அத்துடன் மேலே சொல்லப்பட்ட மாவட்டத்தில் மேற்படி கடனெடுத்தவர் இப்போது அல்லது இதன்பின்னர் எவ்வேளையிலும் காலத்திற்குக் காலம் வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது

இதன்பின்னர் இந்த ஆவணத்தின் தொடர்ச்சிக்காலம் வரை கடனெடுத்தவர் காலத்திற்குக் காலமும் எவ்வேளையிலும் கடனெடுத்தவரின் வசமுள்ள கையிருப்புச் சரக்குகள், பொருள்கள், பூர்த்தியான மற்றும் பூர்த்தியாகாத பண்டங்கள், உடைமைகள் மற்றும் எவ்விதத்திலேனும் விவரிக்கப்பட்ட எல்லாவகையான ஏனைய அசைவுள்ள ஆதனங்களும் அத்துடன் கடனெடுத்தவர் இதன் பின்னர் எவ்வேளையிலேனும் காலத்திற்குக்காலமும் கொண்டு வந்து அல்லது அகற்றிச் சென்று வியாபாரத்தை அல்லது வர்த்தகத்தை அல்லது களஞ்சியப்படுத்தலைச் செய்கின்ற ஏதேனும் இடத்தில் அல்லது அத்தகைய எல்லா இடங்களிலும் உள்ள கையிருப்புச் சரக்குகள், பொருள்கள், பூர்த்தியான மற்றும் பூர்த்தியாகாத பண்டங்கள், உடைமைகள் மற்றும் ஏனைய அசைவுள்ள ஆதனம்.

II

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகரசபை எல்லைகளினுள் கொழும்புத் துறைமுகத்திலுள்ள கப்பல் மேடைகள் மற்றும் பண்டகசாலைகளில் உள்ளனவும் அவற்றின்கண் அமைந்துள்ளனவுமான பின்வருவனவற்றை உள்ளடக்கிய–

**மூலப்பொருள்கள் :**

| விவர விளக்கம் | அளவு |
|---|---|
| துருப்பிடிக்காத உருக்குச் சுருள் | 8000KGS |
| SUS 304JI (0.5x1000xC) | 2100 KGS |
| SUS 304JI (0.6x1219xC) | 2050 KGS |
| உலர்த்திய பவ்விங் துணி 18" | 250EA |
| உலர்த்திய பவ்விங் துணி 16" | 275EA |
| பவ்விங் துணி 18" | 210EA |
| பவ்விங் துணி 16" | 225 EA |
| பவ்விங் வெள்ளைத் துணி 16" | 40 EA |
| கொட்டன் பயஸ் 16" (40 மெஷ்) | 85 EA |
| கொட்டன் பயஸ் 16" (150 மெஷ்) | 90 EA |
| கொட்டன் பிளன்ஸ் பவ்விங் | 180 EA |
| புளு பவ் | 165 EA |
| பவ் கோட்டிங் | 250 EA |
| குறொம் ஒக்சைட் (A கிளாஸ்) | 120KGS |
| குறொம் ஒக்சைட் (B கிளாஸ்) | 100 KGS |
| அலுமினா 25K | 120 KGS |
| ஸ்ரியறிங் அசிட் | 100 KGS |
| பொலிஷிங் வாக்ஸ் | 40EA |
| ஸ்பௌட்ஸ் மற்றும் துணைப்பொருள்கள் | 2500PCS |
| கப்ஸ் | 2000 PCS |
| கவர் | 1500 PCS |
| பிறக்கெற் | 2000 PCS |
| ஹின்ஜ் | 2000 PCS |
| ஹான்டிலஸ், பொல்ட், ஸ்பிரிங்ஸ் | 6000 PCS |
| ஹான்டில் 2 | 2000 PCS |
| டிறோயிங் ஒயில் | 140EA |
| மோல்டிங் டை செட்ஸ் | 150EA |

பூர்த்தியான பொருட்கள்

| விவர விளக்கம் | அளவு |
|---|---|
| மினி பிக் 1.7L | 18000 PCS |
| மினி பிக் 1.5 L | 12000 PCS |

**நடைபெறும் வேலை :**

| விவர விளக்கம் | அளவு |
|---|---|
| மினி பிக் 1.7 L | 750 PCS |
| மினி பிக் 1.5 L | 1000 PCS |

பொருள்கள், இயந்திரங்கள், சாதனங்கள் மற்றும் எல்லாவிதமான ஏனைய எல்லா பண்டங்களும் (இவை எல்லாம் இதனகத்துப் பின்னர் கூட்டாக "கடனெடுத்தவரின் துறைமுகப் பொருள்களும் பண்டங்களும்" எனக் குறிப்பீடு செய்யப்படும் மொத்தமாகவும் தனித்தனியாகவும்.

III

மேல் மாகாணம், நீர்கொழும்பு மாவட்டத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள களஞ்சியங்களிலும் பண்டகசாலைகளிலும் உள்ளனவும் அவற்றின்கண் அமைந்துள்ளனவுமான பொருள்கள், இயந்திரங்கள், சாதனங்கள் மற்றும் எல்லாவிதமான ஏனைய எல்லாப் பண்டங்களும் (இவை எல்லாம் இதனகத்துப் பின்னர் கூட்டாக "கடனெடுத்தவரின் விமானநிலையப் பொருள்களும் பண்டங்களும்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மொத்தமாகவும் தனித்தனியாகவும்.

மேல் மாகாணம், நீர்கொழும்பு மாவட்டத்தில் கட்டுநாயக்க விமான நிலைய குதங்கள் மற்றும் களஞ்சியறைகளிலும் மீதும் இருக்கின்ற துணி வகைகள் மற்றும் பொருட்கள் அத்துடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் மற்றும் மாநகர சபைக்குள் கொழும்பு துறைமுகத்திலுள்ள குதங்கள் மற்றும் கப்பற்றுறை மேடைகளிலும் மீதும் இருக்கின்றவைகளும் அத்துடன் வெல்லம்பிட்டி, மீத்தொட்டமுல்ல, விஹார மாவத்தை, இல. 3ஏ இல் இருக்கின்ற பொறித்தொகுதி மற்றும் மூலப்பொருட்கள் முழுவதும்

ஏல விற்பனை

*("கடப்பாடுடையவர்" ஆன வெல்லம்பிட்டியில் பதிவு இல. என் (பீவீஎஸ்) 40870 ஐக் கொண்ட "ஹெப்பி டே லங்கா (பீவீரீ) லிமிட்டெட்" எனும் பெயர் வடிவிலான நிறுவனத்தின்கீழ் 2005, நவெம்பர் 23 ஆந் திகதியிடப்பட்ட கையிருப்புக்கள் ஈட்டுமுறி மற்றும் 2005, நவெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட பொறித்தொகுதி முறி ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்)*

செலான் வங்கி பீஎல்சீ இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம், 2008, பெப்புருவரி 6 ஆந் திகதி, புதன்கிழமை மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு***.– 2007.9.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.8.16 ஆந் திகதிய "டெய்லி மிரர்", "லங்காதீப" மற்றும் 2007.8.29 ஆந் திகதிய "வீரகேசரி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம் :**

(1) ஏல முடிவில் கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) விற்பனைத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ;
(3) உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதம்) ;
(4) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/ 2% (இரண்டரை வீதம்) ;

(5) ரூபா 1,36,346.52 ஐ விஞ்சாதவாறு மொத்த விளம்பரச் செலவுகளின் 50% (ஐம்பது வீதம்) ;
(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ரூபா 2,500.

உரித்து உறுதிகளையும் அவற்றுடன் தொடர்புபட்ட வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, 'செலிங்கோ செலான் கோபுரங்கள்' 12 ஆவது தளம், செலான் வங்கி பீஎல்சீ, பிரதி பொது முகாமையாளர் (சட்ட சம்பந்தமான பகுதி)" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 4-701000, 2456789.

டன்ஸ்டன் கெலார்ட்,
நீதிமன்ற ஆணையாளரும் தரகரும்,
அரசினால் சான்றுப்படுத்தப்பட்ட நிபுணத்துவம்
பெற்ற ஏலதாரர், விலைமதிப்பிடுநரும்
ஆதன முகவரும்.

42, துட்டுகெமுனு வீதி,
பாமன்கடை,
தெஹிவளை.
தொலைபேசி இல. : 2814743
தொலைபேசி/தொலைநகல் இல. : 2814742, 2814744
துரித அழைப்பு : 0772250422

1-573

---

## செலான் வங்கி பீஎல்சீ – கொக்கலைக் கிளை

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவையில் படின்நொறுவையில் அமைந்துள்ள அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். எம். விதானாச்சியினால் எல்லைகள் வரையறை செய்யப்பட்ட வரைவு இலக்கம் 693ஏ மற்றும் 1995.06.19, 23 மற்றும் 1995.07.09 ஆந் திகதியுடைய துண்டு இல. : 5, எடம்பகஹலியத்த என்றழைக்கப்படும் றூட் ஒன்று மற்றும் முப்பத்திரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 32பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் உள்ள மரம், செடி கொடிகள் மற்றும் கட்டிடங்கள் அடங்கலாக உள்ள காணி. மேற்படி துண்டு இல. 5 காணியின் எல்லைகளாக– வடக்கே : இக்காணியின் துண்டு இல. 2 உம் ; கிழக்கே : ஹல்தூவ மற்றும் ஹல்பத்தூவ ; தெற்கே : இக்காணியின் துண்டு இல. 11 ; மேற்கே : விஹார மாவத்தை மற்றும் இக்காணியின் துண்டு இல. 7, 12, 13 மற்றும் 14 உம் அமைந்துள்ளன. மேற்படி காணி காலி காணிப்பதிவகத்தில் D704/ 256 இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட் டுள்ளது.

கடன்பட்டார் என்ற வகையில் வன்சாவலையைச் சேர்ந்த கலுதொட்டகே அமரவீர என்பவருக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்காக செலான் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.

மேலே விபரிக்கப்பட்ட சொத்தை நான் 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடையும் வழி**.- காலியிலிருந்து மாத்தறை வீதியூடாக சுமார் 3 கி. மீ. தூரம் தெவட கடைத்தெரு வரை சென்று அக்குரெஸ்ஸ வீதியால் இடதுபுறமாகத் திரும்பி சுமார் 6 கி. மீ. தூரம் படின்நொருவ சந்திவரை சென்று வலதுபுறமாக உள்ள விஹார மாவத்தையில் திரும்பி சுமார் 70மீ தூரம் சென்று குறித்த சொத்தை சென்றடையலாம். அச்சொத்து குறிப்பிட்ட வீதியின் இடதுபுறமாக அமைந்துள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2007.06.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2007.07.26 ஆந் திகதி "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" மற்றும் 2007.08.28 ஆந் திகதிய "வீரகேசரி" நாளிதழ்களையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை**.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :

கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்தவேண்டியது ஒரு வீதம் (1%), ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/ 2%), விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000, இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500, விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீ இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி பீஎல்சீ, பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்) இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (சமாதான நீதவான்),
அனுமதிபெற்ற அளவையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும்,
மதிப்பீட்டாளரும்.

ரி அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி இல. : 2696155, 2572940

1-561